
# نداء الإسلام



# நிதாஉல் இஸ்லாம்

விலை ரூபா
25/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதாஉல் இஸ்லாம்

இஸ்லாமிய சன்மார்க்க முத்திங்களிதழ்


ஜாமிஆ வெளியீட்டுப் பணியகம்
சொய்ஸாகலை வீதி,
நாவலப்பிட்டி - 20650
இலங்கை.

தொலைபேசி. 0717-877977
054-2223222
0777-877977


**அட்டைப்படம்**

சவூதி அரேபியாவின் முன்னால் மன்னர் மர்ஹூம் பஹ்திப்னு அப்துல் அஸீஸ் அவர்களால் ஆர்ஜன்டீனாவில் நிர்மானிக்கப்பட்ட மஸ்ஜிதின் அழகிய தோற்றம்.


தனிப் பிரதி ரூபாய் 25.00
தபாலில் ரூபாய் 35.00 ஆண்டுச் சந்தா ரூபாய் 150.00

பிரதி தேவையானோர் தயவு செய்து
மணி ஓடர் அனுப்புமாறு வேண்டுகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதாஉல் இஸ்லாம்

مجلة اسلامية

تصدر كل ثلاثة شهور مرة باللغة التاملية

அணி : 13 இரண்டாயிரத்து பதிமூன்றாம் ஆண்டின் 1434

மணி : 03 மூன்றாம் இதழ் 2013


## இதழின் உள்ளே .....


| | |
|---|---|
| இதழின் இதயம் | 3 |
| வான்மறை விரிவுரை | 6 |
| தேன்மொழித் தெளிவுரை | 12 |
| அரிவையர் அரங்கம் | 14 |
| கருத்துக்கினிய கவிதைகள் | 18 |
| சிந்தை கவரும் சிறுகதை | 26 |
| வரலாற்று வளாகம் | 28 |
| பொறுக்கிய முத்துக்கள் | 34 |


இடையிடையே இதயத்துக்கு இதமூட்டும் இனிய நுகர்வுகள்

**உங்கள் சந்தா இலக்கம் :** COMPLIMENTRY COPY

இவ்விடத்தில் சிகப்புநிற அடையாளமிருப்பின் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது என்பதை குறிக்கும். சந்தாவை புதிப்பித்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

குறிப்பு : நிதாஉல் இஸ்லாம் சஞ்சிகையுடன் தொடர்பு கொள்ளும் போது சந்தா இலக்கம் அவசியம் குறிப்பிடுமாறு வேண்டுகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# نداء الإسلام

மூளையிருந்தம் முறையற்று நடக்கும்
மானிடர்கள் மத்தியிலே
மார்க்கத்தை மகத்தாக மழ்கும் நிதாவே!

உன் ஆக்கங்கள் யாவுமே
மக்கள் நோக்கங்களை மாற்றி
மகத்தான வாழ்வாம் மறுமைக்கு
மழை மழையாக பொலியுதே நன்நெறிகளை
உன்னிய வருகை

மறுமை மறந்து மனதுக்கு அடிபணிந்து
உலகை நோக்காய் செயற்படுவோருக்கு
தடம்புறண்டு அல்லோல கல்லோல பட்டு
உலகை மறந்து மறுமைக்காய் வாழவைக்கிறது
உன் வான்மறை விரிவுரை

மானிடரை மனமாற்றி மறுமைக்காய்
செயற்பட வைக்கும் - நீ
யுக முடிவு வரை - உன் பணி செய்ய
என்னிய வாழ்த்துக்கள்.

ஜாமிஆ மாணவன்
கஹவத்தமுனை முஹம்மது ரியாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழின் இதயம்

## புனித ரமழானை வரவேற்போம்

அல்லாஹ்வின் மாபெரும் உதவியினால் மீண்டும் ஒரு ரமழானை சந்திக்கும் ஒரு பெரும் பாக்கியத்தை பெற்றுள்ளோம். அல்-ஹம்துலில்லாஹ் பொதுவாக இஸ்லாத்தின் முக்கிய கடமைகள் எதுவானாலும் அவற்றை ஒரு சடங்கு சம்பிரதாயமாக கனிக்கப் படக்கூடாது. இவ்வாறு சடங்கு சம்பிரதாயமாக கணிப்பவர்கள்தான் புனித நோன்பிலே பள்ளிவாயல்களில் அணிதிறல்கிறார்கள். நல்லமல்கள் செய்கிறார்கள், தான தர்மங்களைச் செய்கிறார்கள். இன்னோரன்ன நல்ல காரியங்களில் ஈடுபடுகின்றார்கள். ஆனால் நோன்பு முடிந்ததும் மஸ்ஜித்களோடு, நற்கருமங்களோடு அனைத்தும் முடிவடைந்து விடுகிறது. பிறகு உயிரோடு இருந்தால் அடுத்த ரமழானில்தான் அவர்களை மீண்டும் பார்க்கலாம். இது உண்மையில் அல்லாஹ்வுக்கு செய்யும் கடமையல்ல. இவ்வாறு செய்வது ஒரு முஸ்லிமுக்கு அழகுமல்ல.

ரமழானில் அல்ல. பருவமெய்தியது முதல் ஆரம்பமாகும் நற்செயல்கள் மரணம் வரை தொடரவேண்டும். நாளுக்கு நாள் அவற்றால் பன்படவேண்டும். அல்லாஹ்வின் நெருக்கம் அதிகரிக்கவேண்டும். இதனால் அல்லாஹ்வின் அன்பும் திருப்தியும் பெறவேண்டும். நம்மிடத்தில் ஆர்வம் கூடவேண்டும். இக்லாஸாமன், தூய எண்ணத்துடன் நல்லமல்கள் செய்யவேண்டும்.

ஒரு முஸ்லிம் எப்பொழுதும் அல்லாஹ்வின் தொடர்புடன் இருக்கவேண்டும் அல்லாஹ்வின் ஏவல் விலக்கல்களை கடைபிடித்தொழுக வேண்டும். எமது நடவடிக்கைகள் ஆரம்பமுதலே இருந்தால்தான் இடையிடையே நம்மை எதிர்நோக்கும் எந்த நற்கருமங்களாக இருப்பினும் அவை சீராக சிறப்பாக அமையும். அதுதான் அல்லாஹ்வையும் திருப்திபடுத்தும்.

காலத்துக்குக்காலம், நேரத்துக்கு நேரம் நாம் நினைப்பது போல் செயல்படுவோமேயானால் அவை எந்த பலனையும் தருமா என்பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகமே. ஏதோ அல்லாஹ் அவனது கருணையால் நம்மவர்கள் மீது அருள்மாறி பொளித்தால்தான் ஈடேற்றம் இட்டும். இல்லையே இது அல்லாஹ்வுக்கு டிமிக்கி கொடுக்கும் கதையாகிவிடும். எனவே சமய சந்தர்ப்பங்களில் நாம் சில நல்ல காரியங்களைச் செய்வது உகந்ததல்ல.

ஆரம்பம் முதல் தொடராக நற்கருமங்கள் எதை எப்போது செய்யவேண்டும் எனக்கூறப்பட்டுள்ளதா அவற்றை குறிப்பிட்ட கால நேரங்களில் செய்வதுதான் பொறுத்தமாகும். அவ்வாறு செயல்படும் போது புனித ரமழானும் நம்மிடத்தில் ஓர் உயர் நிலையை அடையும்.

புனித ரமழான் மட்டுமல்ல, இஸ்லாம் கூறும் அனைத்து கருமங்களும் சீறாக சிறப்பாக செயல்படும். அப்போது நம்மிடம் ஒரு நிலையான செயற்பாடு இருக்கும். இந்நிலையில் நாம் தொடராக நல்லபல காரியங்களை செயல்படுத்தும்போது மனதில் ஒருவித திருப்தி. இதே நிலையில் புனித ரமழானுடைய காலங்கள் அனைத்துக்கும் மெருகூட்டக்கூடியதாக இருக்கும். அக்காலங்களில் ஒரு தனிப்பட்ட உற்சாகத்தோடும் தெம்போடும் செயற்படுவோம். இது அல்லாஹ்வின் மகத்தான ஏற்பாடு. அதனால் நாம் எதையும் மரணம் வரை நிலையாகச் செய்யக்கூடியவர்களாக இருக்கவேண்டும். "சிறிய அளவிலே செய்தாலும் சிறப்பாகச் செய்" என்பது நபி மொழி.

எனவே நாம் செய்யும் நற்கருமங்கள் இடைவிடாது தொடராக இருக்கவேண்டும். இது ரமழான் வந்தால் மாத்திரம் ஒரு துடிப்பு உற்சாகத்தோடு நற்கருமங்களில் ஈடுபடுவதும், ரமழான் கழிந்ததும் வீட்டோடு வீடு ஆகிவிடுவது அல்லது நற்கருமங்களுக்கு விடைகொடுத்துவிடுவதும் சிறப்பான காரியங்கள் அல்ல. இஸ்லாம் நமக்கு இவ்வாறு போதிக்கவேயில்லை. இஸ்லாம் ஒரு தற்காலிக மார்க்கமல்ல. எது செய்தாலும் நிலையாகச் செய்யச் சொல்லும் மார்க்கம். அதனால் நோன்பில் மாத்திரம் நற்கருமங்கள் செய்து இஸ்லாமல்ல. மரணம் வரை நல்ல காரியங்களைச் செய்வதுதான் இஸ்லாம். இதனை உணர்ந்து, திருந்தி வாழவேண்டும். இது நமது கடமை. அல்லாஹ் உண்மை உணர்ந்து செயல்பட நம் அனைவருக்கும் பேரருள் புரிவானாக!.

இறந்துவிட்டவருக்காக மூன்று நாட்களுக்கு அதிகமாக துக்கம் கடைபிடிப்பது கூடாது. ஆனால் கணவன் இறந்துவிட்டால் மனைவி நான்கு மாதங்களும் பத்து நாட்களும் துக்கம் கடைபிடிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12ம் பக்க தொடர்ச்சி......

நான் (அன்னை) ஜைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி) அவர்களின் சகோதரர் இறந்த சமயம் அவர்களிடம் சென்றேன். அப்போது அவர்கள் நறுமணப் பொருள் ஒன்றைக் கொண்டு வரச் சொல்லி அதைப் பூசிக் கொண்டார்கள்.

பிறகு, இதோ! (பாருங்கள்) அல்லாஹ்வின் மீது சத்தியமாக! எனக்கு இப்பொழுது இந்த நறுமணம் தேவையே இல்லை. எனினும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மிம்பர்) மேடையில் இருந்தபடி "அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்ட எந்தப் பெண்ணும் இறந்துபோன ஒருவருக்காக மூன்று நாட்களுக்கு மேல் துக்கம் கடைப்பிடிக்க அனுமதியில்லை. ஆனால், தம் கணவருக்காக நான்கு மாதம் பத்து நாட்கள் தவிர!" என்று கூறக் கேட்டுள்ளேன் என்றார்கள். (ஆகவேதான் இப்படி செய்தேன் என்றார்கள்).

## பெரும்பாவங்களை விட்டும் விலகுவதன் சிறப்பு

உங்களுக்கு விலக்கப்பட்ட பெரும் பாவமான காரியங்களிலிருந்து நீங்கள் விலகிக்கொண்டால் உங்களுடைய (மற்ற) சிறிய பாவங்களுக்கு (அதனை) நாம் பரிகாரமாக்கி உங்களை (மிக்க) கண்ணியமான இடங்களிலும் நுழைவிப்போம். அல் குர்ஆன் : 4-30

வானங்கள் பூமியிலுள்ளவைகள் அனைத்தும் அல்லாஹ்வுக்குரியனவே. ஆகவே தீமை செய்தவர்களுக்கு அவர்களுடைய (தீய) செயலுக்குத்தக்கவாறு (தீமையைக்) கூலியாகக்கொடுக்கின்றான். நன்மை செய்தவர்களுக்கு நன்மையை கூலியாகக்கொடுக்கின்றான்.

அல் குர்ஆன் : 53-31

எனது தோழர்களை ஏசாதீர்கள். அன்சாரிகளை நேசிப்பவர் மூ.்.மின் அவர்களை வெறுப்பவர் நயவஞ்சகர்கள். அவர்கள் மீது அன்பு கொள்பவர் மீது அல்லாஹ் அன்புகொள்கிறான். அவர்களை வெறுப்பவர்களை அல்லாஹ் வெறுக்கிறான்.

- புஹாரி, முஸ்லிம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான்மறை விரிவுரை

## குழந்தை போல் மனிதர்கள் குழைத்திடும் முதுமை!

மௌலானா தேங்கை ஷரபுத்தீன் மிஸ்பாஹி

பொருளுரை :

“ஒருவருக்கு நாம் நீண்ட ஆயுளைக் கொடுத்தால் அவரின் நிலையை(க் குழந்தைப் போல்) தலைகீழாக மாற்றி விடுகிறோம். (இதை) அவர்கள் சிந்தித்தறிய வேண்டாமா?”

விரிவுரை :

சிந்தனையைத் தூண்டும் இந்தத் திருவசனம், மானிட உடலில் இறைவன் ஏற்படுத்தும் படிப்படியான மாற்றங்களைப் பகர்ந்து கொண்டிருக்கிறது. பூவிதழின் மென்மையினும் மென்மையான மேனியைப் பெற்ற பச்சிளம் பாலகனாய், பாருலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் - நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சியடைகிறான். ஆனால், இந்த வளர்ச்சியைக் காலப் போக்கில்தான் கண்டு கொள்ள முடியுமே தவிர, அனுதினமும் அறிய முடிவதில்லை. அழுகையைத் தவிர வேறெதையும் அறியவியலாத அளவுக்குப் பிறக்கும் மனிதன் நாளடைவில் தான் கண்ணைத் திறக்கிறான்; கைவிரல்களை விரிக்கிறான்; புரண்டு படுக்கிறான்; புன்னகை சிந்துகிறான்; பூமியில் தவழ்கிறான். பூமழலை உதிர்க்கிறான்; குழைந்து நிற்கிறான். குறுநடை போடுகிறான்.

இவ்வாறு, சிறிது சிறிதாக வளர்ச்சியும் வலிமையும் அறிவளவும் ஆற்றலும் அதிகரிக்கும் நிலையிலுள்ள மனிதனுக்கு, வளர்ச்சி நிலையென்பது வாழ்நாள் முழுவதும் அமைவதில்லை. நாற்பது வயதுவரைதான் மனிதன் உடல், நாள்தோறும் வலிமையும் வளர்ச்சியும் பெறுகிறது. அதற்குப் பின் வளர்ச்சிப் பருவம் அகன்று, தளர்ச்சிப் பருவம் தொடங்குகிறது. இந்தத் தளர்ச்சிப் பருவம் நாட்கள் செல்லச் செல்ல அதிகரித்துக் கொண்டேயிருக்கும். மனிதனின் பாலப் பருவத்தில் அவன் மேனியைத் தழுவிக் கொண்டிருந்த பலவீன நிலை. மீண்டும் அவனுடைய மேனியைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழுவும் அளவுக்குப் படிப்படியாக அவன் உடற்கட்டு தலைகீழாக மாறுகிறது. இதைத்தான், "ஒருவருக்கு நாம் நீண்ட ஆயுளைக் கொடுத்தால் அவரின் நிலையை (க் குழந்தையைப் போல்) தலைகீழாக மாற்றி விடுகிறோம்." (வமன் நுஅம்மிர்ஹு நுநக்கிஸ்ஹு ∴பில் கல்கி) எனும், இனிய தொடர் மூலம் இறைவன் எடுத்துரைக்கிறான்.

மானிட வாழ்வின் பருவங்கள் என்பது, மலைமீது ஏறி இறங்குவதற்கு ஒப்பானது. ஒருவன், ஒரு மலைமீது ஏறுவதற்கு முன் பள்ளமான அடிவாரத்தில் நிற்கிறான். பிறகு படிப்படியாக ஏறுகிறான். இவ்வாறு ஏறுவதால் மலைச் சிகரத்தை அடைகிறான். மலைச் சிகரத்தை அடைந்ததும் அங்குச் சற்று நேரம் இளைப்பாறுகிறான். இளைப்பாறி விட்டு, மீண்டும் படிப்படியாகக் கீழ் நோக்கி இறங்குகிறான். இவ்வாறு கீழ் நோக்கி இறங்குபவன், மலைமீது ஏறுவதற்கு முன்னர் இருந்த, அதே பள்ளமான அடி வாரத்தையல்லவா முடிவில் வந்தடைகிறான்.

இவ்வாறே, மனிதனின் வாழ்க்கைப் பருவமும் அமைந்துள்ளது. பிறப்பிலிருந்து 33 வயது வரையுள்ள பருவம், மனித உடலும் உள்ளமும் சிறிது சிறிதாக வளர்ச்சியும் வலிமையும் அடையும் பருவமாகும். முப்பத்து மூன்று வயது என்பது, இளமைப் பருவத்தின் எல்லையாகும். உடல் வலிவும் உள வலிவும் உச்ச நிலை எய்துவது இந்த வயதில்தான் அமைந்துள்ளது. முப்பத்து மூன்று வயதிலிருந்து நாற்பது வயது வரையுள்ள பருவம், உடல்வளர்ச்சி நிற்கும் பருவமாகும். நாற்பதாம் வயது, மனித வாழ்க்கைப் பருவத்தின் ஒரு திருப்பு முனையாகும். உடல் வளர்ச்சியின் எல்லைக் கோடு, இந்த வயதில் தான் போடப்பட்டுள்ளது. பண்பட்ட ஞானம், பக்குவம் பெறும் பருவம் நாற்பதாம் வயதுதான். எனவே தான், நாயகப் பெருமானாருக்கு நபிப்பட்டம் நாற்பதாம் வயதில் கிடைத்தது போலும்.

நாற்பது வயதிலிருந்து அறுபது வயது வரையுள்ள பருவத்தில் மனித உடலில் மறைமுகமாக தளர்ச்சி நிலை, தவழத் தொடங்குகிறது. அறுபது வயது முதல் ஆயுளின் இறுதி வரையுள்ள பருவத்தில் - முதுமை முளைவிடத் தொடங்கி, முழுமையாகத் தன் முகத்தைப் பளிச்செனக் காட்டுகிறது. இப்பருவத்தில் தான் மானிட உடல், வலுவிழந்து பொலி விழந்து நலிவடைந்து விடுகிறது. இத்தகைய முதுமை, முற்றினால் உருவாகும் நிலைக்கு, அரபு மொழியில் "அர்தலுல் உம்ரு" எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அர்தலுல் உம்ரு" எனும் சொல்லுக்கு "மிகவும் இழிவான தாழ்வான – நிலையிலுள்ள ஆயுள்" என்று பொருள். இந்தப் பருவம் வரை வாழ்பவர்கள், கண்பார்வை மங்கி, கை கால்கள் நடுக்கமுற்று, நாடி நரம்பெல்லாம் தளர்வு பெற்று, நடமாடும் வலுவிழந்து உடலுறுப்புகளெல்லாம் உரமிழந்து சிந்தனையாற்றல் ஓய்ந்து போகும் நிலையைப் பெற்று, கட்டிலோடு ஒட்டிப் போய்க் கிடந்து கடுந்துயர்களேற்பதால் தான் முதுமை முற்றிய இந்தப் பருவம் - "மிக இழிந்த ஆயுள்" எனும் பொருளைத் தரும் "அர்தலுல் உம்ரு" என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது.

இந்தப் பருவம் குறித்து, இறைமறை இரு இடங்களில் எடுத்துரைக்கிறது. இப்பருவம் வரை இவ்வுலகில் வாழ்வது இடர்கள் மிக்கது என்பதனால்தான் - அருளாளன் அல்லாஹ், தன்னுடைய அருமைத் தூதரை அறுபத்து மூன்றாம் வயதிலேயே தன்பால் அழைத்துக் கொண்டான் போலும். "அர்தலுல் உம்ரு" எனப்படும் இப்பருவம், தொண்ணூறு வயது என்று ஹஜ்ரத் "கத்தாதா (ரலியல்லாஹு அன்ஹு)" அவர்கள் அறிவிக்கிறார்கள்.

வையக வாழ்வின் தொடக்கமான குழந்தைப் பருவம் வயோதிகத்தின் வரம்பான "அர்தலுல் உம்ரு" பருவமும் பலவீனத்தைப் பகிரங்கமாகப் பாரறியப் பறைசாற்றும் பருவங்களாகும். இவ்விரு பருவங்களுக்கும் இடைப்பட்ட இளைக்காத இளமைப் பருவம், பலமான உடல் நிலையைப் பகரும் பருவமாகும். எனவே, அன்னை வயிற்றிலிருந்து அகிலத்தில் அடிபதிக்கும் அரும்புப் பருவத்தை - ஒரு மலையடி வாரத்தில் ஒருவன் நிற்பது போன்றும்; இவ்வுலகில் பிறந்து, மூச்சுவிடும் நாள் முதல் முப்பத்து மூன்று வயது வரையுள்ள வளர்ச்சிப் பருவத்தை – மலையடி வாரத்திலிருந்து அதன் சிகரம் நோக்கி ஒருவன் ஏறுவது போன்றும்; முப்பத்து மூன்று வயது முதல் நாற்பது வயது வரையுள்ள வளர்ச்சியற்ற பருவத்தை (வலிமையின் உச்சமான பருவத்தை) – மலை முகட்டில் ஒருவன் இளைப்பாறுவது போன்றும்; நாற்பது வயதிலிருந்து படிப்படியாக வலிமை குன்றும் பருவத்தை – மலை முகட்டிலிருந்து ஒருவன் படிப்படியாகக் கீழே இறங்குவது போன்றும்; "அர்தலுல் உம்ரு" எனப்படும் முதுமை முற்றிய பருவத்தை – மலை மீது ஏறியவன் அதன் முகட்டிலிருந்து கீழே இறங்கி மலையடிவாரத்தை அடைந்தது போன்றும் உவமைப்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அல்லாஹ் உங்களைப் பலவீன நிலையி(லிருக்கும் இந்திரியத்தி)லிருந்து உருவாக்குகிறான். (அந்த) பலவீனத்திற்குப் பின்னர் (இளமையின்) பலத்தையும் அவனே கொடுக்கிறான். (அந்த) பலத்திற்குப் பின்னர் நரை யையும் பலவீனத்தையும் கொடுக்கிறான்" (குர் ஆன் 30:54) எனும் திருவசனம், வாழ்வின் தொடக்கமும் முடிவும் - அதாவது மழலைப் பருவம் கிழப்பருவமும் - பலவீன நிலையென்றும், இரண்டிற்கும் இடையிலுள்ள இளமைப் பருவம் பலம் மிக்க நிலையென்றும் உணர்த்திக் கொண்டிருக்கிறது. பாயும் புலி, சீறும் சிறுத்தை என்றெல்லாம் சித்தரிக்கப்படும் அளவுக்கு வலிமை பெற்றுத் திகழும் வாலிபப் பருவத்தின் இருமுனைகளும், பலவீனம் போன்ற பல்வேறு நிலைகளில் ஒன்றுபோல் அமைந்திருக்கும் உண்மை – சிந்தித்துணரத் தக்கதாகும்.

பச்சிளம் பாலகர்களுக்குப் பற்கள் இருப்பதில்லை. முதுமையின் முடியை அடைந்தவர்களுக்கும் பற்களிருப்பதில்லை. குழந்தைகளின் "குழலினும் யாழினும் இனிய" மழலை மொழியை மற்றவர்கள் புரிந்து கொள்வது சற்றுக் கடினமாக இருக்கும். கீறல் விழுந்த இசைத் தட்டுப்போல், கிழவர்களின் பொக்கை வாய் உதிர்க்கும் சொற்களும் புரிவதற்கு அரிதாக இருக்கும். தவழும் குழந்தைக்குத் தரையில் நடக்கவேண்டுமெனும் தாகம் மிகும்போது அது, தள்ளாடித் தடுமாறி நடக்கத் தொடங்குகிறது. தள்ளாத வயதுக் கிழவர்களும் இவ்வாறே தள்ளாடித்தான் நடக்கின்றனர். உண்ணவும், பருகவும், உடுக்கவும், நடக்கவும் மற்றவர்களின் துணை குழந்தைக்குத் தேவைப்படுகிறது. கிழவர்களும் பிறர் துணையைத்தான் பெரிதும் எதிர்ப்பார்த்திருக்கின்றனர். அரைகுறை ஆடைகள், அரும்புக் குழந்தைகளுக்கு அருவருப்பாகக் கருதப்படுவதில்லை. முதுநிலைக் கிழவர்களுக்கும் இதே நிலைதான். தொட்டிலோடு தேய்ந்த குழந்தைகளின் கழிவுப் பொருட்கள், மற்றவர் கரங்களினாலேயே மாற்றப்பட வேண்டிய நிலையிருப்பதுபோல், கட்டிலோடு தேய்ந்த பெருங்கிழவர்களின் கழிவுப் பொருட்களும் மாற்றப்படுவதற்கு மற்றவர் துணையை நாடவேண்டியுள்ளது.

இவ்வாறு, உடலை அடிப்படையாகக் கொண்டு குழந்தைகளுக்கும் கிழவர்களுக்கும் இடையேயுள்ள ஒப்புவமை, அறிவு, ஆய்வு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டும் அமைந்துள்ளது. குழந்தைகளின் அறிவாற்றல், சிந்தனையாற்றல் மிகக் குறைவாகவே இருக்கும். வயோதிகத்தின் வரம்பை எட்டிப் பிடித்தோர்களின் அறிவாற்றலும் இத்தகையதுதான். ஏற்கனவே பெற்றிருந்த ஞானமெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயோதிகத்தின் உச்சத்தால் வற்றிவிடுவதுண்டு அதிக முதுமையினால் அறிவின் முனை மழுங்கிவிடும். "அனைத்தையும் அறிந்து வைத்த பின்னர், எதையுமே அறியாதவர்களைப்போல் ஆகிவிடக்கூடிய தளர்ந்த வயது வரையில் வாழ்ந்திருப்போர்களும் உங்களில் உண்டு" எனும் பொருளைத் தாங்கிய இரண்டு திருவசனங்கள் (குர்ஆன் 16:70; 22:5) மேற்கண்ட உண்மையை உறுதிப்படுத்துகின்றன.

ஆனால், உலகியல் ஆசைகளில் ஊறித் திளைத்த சாதாரண மக்களுக்குத் தான், இவ்வாறு முதுமையின் உச்சத்தினால் மூளையின் முனை மழுங்கும் நிலை ஏற்படும். சங்கைக்குரிய நபிமார்கள், ஸஹாபாக்கள், ஆரிபீன்கள், அவுலியாக்கள் ஆகியோர்க்கு இத்தகைய நிலை ஏற்படுவதில்லை. ஹஜ்ரத் இக்ரிமா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள்; "ஒருவர் திருமறையை ஓதி அதன்படி அமல் செய்து வாழ்ந்தால், அவர் முதுமையின் உச்ச நிலையை அடைந்தாலும் அவரின் ஞானம் பாதிக்கப்படுவதில்லை" மெய்ஞான மேதைகளுக்கு அவர்களின் வயதுமுதிர முதிரத்தான், ஞானமும் முதிரும். எனவே தான், மெய்ஞானிகளின் போதனைகளில் மேலானது, அவர்களின் இறுதிக் காலத்தில் உதிர்க்கப்பட்டவையே" என்று, கூறப்படுகிறது.

காலத்தின் சுழற்சியால், இறைவன் நம் மேனியில் வலம் வரச் செய்யும் வயோதிகமும் வலுவற்ற நிலையும் கட்டாயம் தவிர்க்க முடியாதவையாகும். உள்ளங்களிக்கத் துள்ளித் திரிந்த பள்ளிப் பருவத்தையெண்ணி – "பசுமை நிறைந்த நினைவுகளே! பாடித் திரிந்த பறவைகளே! திரும்பி வாரீரோ?" என்று தேம்புவதுண்டு, "கார்குழல், கயல்விழி, கோவை இதழ், கொய்யாக் கன்னம், பிறை நெற்றி, கிளி மூக்கு, திங்கள் முகம், தங்க மேனி, அன்ன நடை, மின்னல் இடை என்றெல்லாம் வர்ணிக்கப்படும் வண்ண ஓவியமான ஒரு வனப்பு மிக்க வனிதை, காலத்தின் கோலத்தால் "காட்டூன்" ஆக்கப்பட்டு, கட்டழைகக் கை நழுவிவிடச் செய்வது இறைவன் ஏற்படுத்தும் இன்றியமையாத நியதியல்லவா? வலிமை வாய்ந்த வாலிபம் எனும் வசந்த மண்டபம், பலங்குன்றிய முதுமையெனும் பாசிபடர் பாழ்மண்டபம் ஆகியே தீரவேண்டும் என்பதல்லவா ஆண்டவனின் கட்டளை.

"முதுமையை முறியடித்து விட்டு, என்றென்றும் முறுக்கேறிய இளைஞனாய் இருக்கவியலுமா?" என்ற வினாவுக்கு, கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் "மூப்பு பற்றிய ஆய்வுத் துறை"யின் (GERONTOLOGY) தலைவராகப் பணியாற்றும் பேராசிரியர், "லிலோ நார்ட் ஹே.்.பில்க்" என்பவர் விடைதரும் போது, "நமது உடலிலுள்ள செல்கள் ஒவ்வொரு வினாடியும் அழிந்து கொண்டிருப்பதால், என்றென்றும் இளமையோடு இருப்பது இயலாத காரியம்" எனக் குறிப்பிடுகிறார்.

எனவே, ஒரு காலத்தில் குழந்தையாக இருந்த நாம், அன்றிருந்ததைப் போன்ற பலவீனத்தை முதுமையின் மூலம் மீண்டும் அடைவதற்கு முன்னரே, இத்தகைய நிலைகளையெல்லாம் நம்முடலில் ஏற்படுத்தும் இறைவனை வணங்கி வாழ்வோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்ஆனின் சிறப்பு

மனித இனத்திற்கு நேர்வழி காட்டுவதற்காக வல்ல இறைவனால் இறக்கியருளப்பட்ட இறுதி வேதமே அல்குர்ஆன். இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மூலம் உலகிற்கு வழங்கப்பட்ட இவ்வேதம் இவ்வுலகில் மனித இனத்தின் நல் வாழ்விற்கும் வெற்றிக்கும் துணை புரியக் கூடிய ஒரு வழி காட்டியாகும்.

அல்குர்ஆன் எவ்வாறு மனித சமுதாயத்துக்கு வழிகாட்ட தகுந்த உன்னதமான வழிகாட்டல்களை கொண்டிருப்பதனால் உள்ளகச் சிறப்புக்களைக் கொண்டுள்ளதோ அதே போன்று அதற்கு மேலும் பல புறச் சிறப்புக்களும் உண்டு. அவற்றுள் அல்குர்ஆனை ஓதுதல், செவிமடுத்தல், மனனமிடல் முதலியவற்றின் சிறப்புக்கள் பற்றி அல்குர்ஆனிலும் அல் ஹதீஸ்களிலும் பல இடங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இஸ்லாமிய ஷரீஆவில் அல்குர்ஆனை ஓதுவதும் இபாதத் ஆகக் கணிக்கப்படுகிறது. இத்தகைய சிறப்புகள் தவ்றாத், இன்ஜீல் போன்ற வேதங்களுக்கோ அல் ஹதீஸ், பிக்ஹு", ஸீரா போன்ற இஸ்லாமிய கிரந்தங்களுக்கோ இல்லாதவையாகும். இத்தகைய நூல்களை அறிவு பெறும் நோக்கோடு படிக்கையில் அதற்காக கூலி வழங்கப்படுமே அன்றி, அக்கிரந்தங்களில் அடங்கியுள்ள சொற்களுக்கோ எழுத்துக்களுக்கோ தனிச்சிறப்பில்லை. அவ்வெழுத்துக்களை வாசிப்பதற்காக பிரத்தியோக நன்மைகள் எதுவும் கிடைப்பது இல்லை. ஆனால், அல்குர்ஆன் தனது ஒவ்வோர் எழுத்தையும் வாசிப்பவருக்கும் குறைந்தது பத்து நன்மைகளை வழங்கியுள்ளது இத்தகைய சிறப்புகள் பற்றி குறிப்பிடும் சில அல்குர்ஆன் வசன அல்ஹதீஸ் தொகுப்புக்கள் உள்ளன. அல்குர்ஆனை ஓதுவது பற்றி அல்குர்ஆன் கூறுகிறது;

அல்குர்ஆன் ஓதப்பட்டால் அதனைச் செவிமடுங்கள் மேலும் அமைதியாயிருங்கள். நீங்கள் அருள்பாளிக்கப்படலாம்

(அல் அ.்.ராப் : 204)

நிச்சயமாக அல்லாஹ்வின் வேதத்தை ஓதி தொழுகையை நிலை நாட்டிய நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து இரகசியமாகவும் பரகசியமாகவும் செலவு செய்பவர்கள் நட்டமடையாத வியாபாரத்தை எதிர்கொள்வார்கள் (அல் பாதிர் : 29)

அல்குர்ஆனை ஓதுவுது பற்றி அல் ஹதீஸ் அல்குர்ஆன் ஓதுங்கள். மறுமை நாளில் அது அதனை ஓதியவருக்காக பரிந்துரை செய்யும்

அறிவிப்பவர் : அபூஉமாமா (ரழி) (முஸ்லிம்)

அல்குர்ஆனை ஓதுகின்ற ஒரு விசுவாசியின் உதாரணம் தோடம்பழத்தைப் போன்றதாகும். அதன் நறுமனம் சிறந்தது, அதன் சுவையும் சிறந்தது. அல்குர்ஆனை ஓதி வராத ஒரு மு.்.மினின் உதாரணம் ஈத்தம் பழத்தைப் போன்றது அதற்கு நறுமனம் கிடையாது. சிறந்த சுவையுடையது.

தொடர்ச்சி 27ம் பக்கம்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூதர் மொழித் தெளிவுரை

## நோன்பு

மௌலானா அப்துல் க.்.பார் ஹஸன் ரஹ்மானி

> பொய் பேசுவதையும், அதன்படி செயல்படுவதையும், யார் விடவில்லையோ அவர் (நோன்பு நோற்று) உண்ணாமலும் படுக்காமலும் இருப்பது, அல்லாஹ்வுக்குத் தேவையற்ற ஒன்றாகும்.
>
> அறிவிப்பவர் : ஹஸரத் அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) நூல் : புஹாரி, மிஷ்காத்

பொதுவாக பொய்பேசுவது ஹறாமாகும். இந்த பொய்யினால் அனேக மக்கள் ஏமாற்றமடைகின்றனர். சிலர் பொய் கூறுவதைப் பார்த்தால் சொல்லும் விதம் உண்மையாகவே தெரியும். ஆனால் அது முற்றிலும் பொய்யாக இருக்கும். பொதுவாக கொடுக்கள் வாங்களில், திருமணங்களில் இன்னும் பல விவகாரங்களில் சர்வ சாதாரணமாக பொய் கூறுபவர்கள் அநேகம். சிறிதும் கூட அதனால் ஏற்படும் விளைவுகளை உணர்வதில்லை.

நோன்பு என்றாலே பேணுதல் அதிகமாக இருக்கவேண்டும். பொதுவாக தனது உறுப்புக்களை சகல தவறான செயல்களிலிருந்தும் பாதுகாக்கவேண்டும். இது கட்டாயக் கடமையாகும். பொதுவாக நாவை மாத்திரம் பேணுவதல்ல. தலை முதல் கால் வரையுள்ள உறுப்புகள் சகல நிலைகளிலும் தவறான செயல்பாடுகளிலிருந்து பாதுகாக்கப்படவேண்டும்.

நோன்பு ஒரு சாதாரண அமலல்ல. நம்மவர்களது வயிற்றை உணவு, பாணங்களைவிட்டும் பாதுகாப்பதுபோல உறுப்புகளைக்கூட பாதுகாக்க வேண்டும். மனிதனுடைய ஆன்மீக வளர்ச்சி அதில்தான் தங்கியிருக்கிறது. ஒரு மனிதன் பரிசுத்தவானாகத் திகழ அவன் தன்னை அனைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகளிலும் தீய சொல் செயலைவிட்டும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

பொய்பேசுவது அனைத்திலும் ஒரு தீய செயலாகும். அத்துடன் புறம் பேசுவது, இட்டுக்கட்டி இல்லாததை உண்மையென கூறுவதும் ஒரு படுபாதகச் செயலாகும்.

நோன்பு ஒரு புனிதமான அமல். வருடத்துக்கு ஒரு முறை நம்மை நோக்கி விடுகின்றது. அதனைப் பேணி பாதுகாத்து வழியனுப்பவேண்டியது நம் கடமை. மீண்டும் இவ்வரிய சந்தர்ப்பம் கிடைக்குமா? என்று கூறமுடியாது. அதனால் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாது, சரியாக சீறாகப் பயன்படுத்தி, கிடைக்கும் பலன்களை முற்றும்முழுதாகப் பெற முயல்வதுதான் அறிவுடமையாகும்.

சில வியாபாரிகள் இருக்கிறார்கள். பொய் சொல்வதில் வின்னர்களாக இருப்பார்கள். பொய் சொல்வது ஹறாமே என அவர்களிடம் கூறினால் "பொய் சொல்லாமல் வியாபாரம் செய்யமுடியாதே" என்பார்கள். இப்படிக் கூறுபவர்கள் அல்-குர்ஆனின் சட்டத்தையே மீறுகின்றனர். பெரும் பாவமல்லவா! உண்மைக்கு என்றும் வெற்றியுண்டு என்பதை அறியாதிருக்கின்றனர். பொய் சொல்லி பொருளை விற்பதனால் பாவம் மட்டுமல்ல பரக்கத்தும் எடுபட்டுப்போகும். அத்துடன் அத்தகைய வியாபாரம் நிலைத்திருப்பதுமில்லை. வியாபாரம் முன்னேற்றம் அடைவதாக தென்பட்டாலும் நாளடைவில் வியாபாரம் சறுகி ஈற்றில் பிறரிடம் கையேந்தவேண்டிய நிலை ஏற்படும். இது அனுபவம் கற்பிக்கும் பாடமாகும்.

நோன்புடைய காலமென்றால் மிகுந்த பயபக்தியுடன் இருபத்தி ஒன்பது அல்லது முப்பது நாட்களையும் கழிக்கவேண்டும். பொதுவாக உடலுறுப்புகளை எல்லாம் பேணிப் பாதுகாத்து நற்கருமங்கள் புரியவேண்டும். அல்லாஹ்வுக்குப் பொருத்தமாக நடக்கவேண்டும். பக்திப் பரவசம் தாண்டவமாடவேண்டும். அப்போதுதான் நோன்பு நோன்பாக அமையும். கிடைக்கும் பலன்களும் திருப்திகரமாக கிடைக்கும்.

**நபியவர்கள் கூறினார்கள்;**

உமது வாழ்க்கையை மரணம் வருவதற்கு முன், வாலிபத்தை வயோதிபம் வருவதற்கு முன், ஓய்வை வேலை வருவதற்கு முன், சுகத்தை நோய்வருவதற்கு முன், வசதிவாய்ப்புகளை வறுமை வருவதற்கு முன் நன்கு பயன்படுத்திக்கொள். –

ஸஹீஹுல் ஜாமிஃ. –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிவையர் அரங்கம்

## கணவருக்காக அலங்காரம் செய்துகொள்வாள்

எந்தெந்த முறைகளிலெல்லாம் ஒரு மனைவி தமது கணவருக்காகத் தன்னை அலங்கரித்துக்கொள்ள இயலுமோ, அந்த முறைகளிலெல்லாம் அவள் தன்னை அலங்கரித்துக்கொள்ள வேண்டும்.

கணவரின் கண்கள் குளிர்ச்சி அடையும் விதமாக அவள் தன் அழகை வெளிப்படுத்திக்கொள்ள வேண்டும். தமது அழகின் மூலமாக கணவருக்குத் திருப்தியூட்டி, மகிழ்ச்சியையும், சந்தோஷத்தையும் ஏற்படுத்த வேண்டும். இப்படிதான் நமக்கு முன் வாழ்ந்த நல்ல பெண்மணிகள் திகழ்ந்திருக்கிறார்கள்.

அவர்கள் இறைவணக்க வழிபாடுகளிலே திளைத்து வந்தார்கள்; அல்லாஹ்வின் நூலை ஓதி வந்தார்கள். இருப்பினும், தங்களது கணவரை மகிழ்விப்பதில் அவர்கள் எவ்விதக் குறையும் வைக்கவில்லை. இவர்களுக்கொரு சிறந்த உதாரணமாக அன்னை ஆயிஷா (ரழி) அவர்களும் மற்ற பெண்களும் திகழ்கிறார்கள்.

இஸ்லாமிய வரலாற்றில் வருகிற பல பெண்கள் தங்களைச் சிறந்த ஆடைகளால் அலங்கரித்துக் கொண்டதை அறிகிறோம். கணவருடன் உள்ளூரில் இருந்தபோதிலும், அல்லது வெளியூர் செல்லும்போதிலும் அவருக்காக நகைகள் அணிந்து அலங்கரித்துக்கொண்டார்கள்.

ஒருமுறை பக்ரா பின்த் உக்பா (ரழி) அவர்கள் அன்னை ஆயிஷா (ரழி) அவர்களிடம் வந்து மருதாணி இடுவதைப் பற்றி கேட்டார்கள். அதற்கு ஆயிஷா (ரழி), "அது ஒரு நல்ல மரம்; அதன் சாறும் தூய்மையானது" என்று கூறினார்கள். அடுத்து பக்ரா (ரழி) அவர்கள் ஒரு பெண் தனது தேவையற்ற முடிகளை அகற்றிக் கொள்வதைப் பற்றி கேட்டார்கள். அதற்கு ஆயிஷா (ரழி) அவர்கள், "உன் கணவருக்காக உனது இரண்டு கண்களையும் கழற்றி அதை முன்பிருந்ததை விட மிக கவர்ச்சியாக பொருத்திக்கொள்ள முடியும் என்ற வாய்ப்பிருந்தால், அதையும் நீ செய்துகொள்ளலாம்" என்று பதிலளித்தார்கள். (அஹ்காமுன்னிஸா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கணவருக்காக அலங்கரித்துக் கொள்வதில் அலட்சியமாக இருந்து கொண்டிருக்கிற பெண்கள் இந்த வார்த்தைகளைக் கவனிக்க வேண்டும். எனவே, ஒரு மனைவியானவள் தனது அலங்காரங்களை முதன்மையாக கணவருக்காகவே செய்து கொள்ள வேண்டும். தோழிகளுக்காகவோ, பக்கத்து வீட்டு பெண்களுக்காகவோ அலங்கரித்துக் கொள்ளக்கூடாது.

கணவருக்காக அழகுபடுத்திக் கொள்வதில் குறை வைக்கக்கூடிய பெண்கள் குற்றவாளிகளாவர். துன் மீதுள்ள கடமையைச் சரிவர நிறைவேற்றாதது, 'குற்றம்' என்பதை அவர்கள் உணர வேண்டும். இப்படி குற்றம் புரிவதால் தங்கள் கணவரை விட்டே அவர்கள் விலக வேண்டிய நிலையும் ஏற்படலாம் என்பதைத் தெரிந்துக்கொள்ள வேண்டும்.

எந்த நேரமும் பரட்டைத் தலையுடனும், மலர்ச்சியற்ற முகத்துடனும், அழுக்கான ஆடையுடனும் இருக்கும் பெண், உண்மையில் கணவருக்கு மாறு செய்பவளாகவும் அறிவற்றவளாகவுமே இருப்பாள். இப்படிப்பட்ட பெண்கள், தங்கள் வீட்டிற்கு விருந்தாளிகள் வந்தாலோ, வெளியில் எங்காவது விழாக்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் சென்றாலோ, உடனே தங்களை முழுமையாக அலங்கரித்துக் கொள்கிறார்கள். வீட்டில் இருக்கும்போதோ கணவருக்காக அலங்கரித்துக் கொள்வதில் அலட்சியம் செய்கிறார்கள்.

அல்லாஹ்வின் நேர்வழி பெற்று நல்லறிவுடன் வாழும் முஸ்லிமான பெண், இது போன்ற குற்றங்களில் இருந்து தன்னை தூரமாக்கி வைத்திருப்பாள். இப்படி நல்ல முறையில் வாழ்கிற பெண், கணவரின் உரிமைகளில் குறை வைப்பாளா என்ன? நிச்சயமாக குறை வைக்கமாட்டாள்.

கணவரிடம் நல்ல முறையில் நடந்து கொள்வது மற்றும் அவருக்கு மாறு செய்வது ஆகிய இரண்டும் முரண்பட்ட பண்புகளாகும். குணவரை அதிகமதிகம் நேசிக்கக்கூடிய, மார்க்கப்பற்றுள்ள பெண்ணிடம் இரண்டும் ஒன்று சேராது. மாறாக முதலாவது பண்பே நிரம்பியிருக்கும்.

நிச்சயமாக இஸ்லாமிய மார்க்கம் பெண்களுக்கு மிக நேர்த்தியான வழி காட்டியுள்ளது. கணவருக்காக அலங்கரித்துக் கொள்ள வேண்டும். அவருடைய கண்களைக் கவரும்படி ஆடை அணிந்து கொள்ள வேண்டும்; அவரது விருப்பம் அறிந்து நடந்துகொள்ள வேண்டும் என்றெல்லாம் உபதேசித்துள்ளது.

துக்கக் காலத்தில் கூட மூன்று நாட்களுக்கு மேல் ஒரு பெண் துக்கம் கடைப்பிடித்து துக்க ஆடைகள் அணியக்கூடாது என்று கட்டளையிட்டுள்ளது. ஆனால் கணவர் இறந்து விட்டால் மட்டும் நான்கு மாதமும் பத்து நாட்களும் துக்கம் கடைப்பிடிக்கலாம் என்று அனுமதித்திருக்கிறது.

இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் ஸைனப் பின்த் அபீசலமா (ரழி) அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதி நீதிமன்றங்களும் பெண்களின் உள்ளக் குமுறல்களும்

அல்-ஹாஜ்ஜா தாரிகா சித்தீக்

இன்று முஸ்லிம்கள் மத்தியில் தற்கொலைகள் ஏன் அதிகரித்து வருகின்றது என்பது தான் எல்லோர் மனதிலும் உள்ள கவலையான கேள்விக் குறிகளாகவுள்ளன. இதை ஆராய்ந்த போதுதான் பின்வருமான உண்மைத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

காதி நீதிமன்றங்களும் பெண்களின் உள்ளக் குமுறல்களும் எனக் கூறப்படுகின்றன. திருக்குர்ஆனில் அல்லாஹ் விவாகரத்தை தனது கசப்பான விருப்பம் என எவ்வாறு ஆணித்தனமாகக் கூறப்பட்டுள்ளதோ, அதேபோன்று தான் காதி நீதிமன்றங்கள் சென்ற பெண்களும் அவர்களின் அனுபவங்களைக் கசப்பான அருவருக்கத்தக்க அனுபவங்களாக சபிக்கிறார்கள், சாபமிடுகிறார்கள். இதற்கான காரணங்களாக காதி நீதிமன்றங்களில் நிகழும் குறைபாடுகள் எனக் கூறுகிறார்கள்.

காதி நீதிமன்றங்களில் உள்ள குறைபாடுகள் எனக் கூறும்போது அங்குள்ள அசௌகரியங்களோ கட்டிட நிர்மாண வேலைகளில் உள்ள குறைபாடுகளோ அல்ல, மாறாக காதிமார்கள் வழக்கு விசாரிப்பதில் உள்ள குறைபாடுகள் ஆகும்.

இஸ்லாம் வளர வளர அதன் பிற்போக்குகளும் வளர வேண்டும். இங்கு இதற்கு மாறானதொரு நிகழ்வு நடைபெறுவது வேதனைக்குறிய விஷயம்.

காதி நீதிமன்றங்கள் பண்டைய காலம் முதல் இன்று வரைக்கும் அவர்களின் கொள்கைகளில் மாற்றம் இல்லை. வழக்கு விசாரிக்கும் போது பேசப்படும் அசிங்கமான அருவருக்கத்தக்க வார்த்தைகளை இங்கே பெண்களின் மனதை மிகவும் நோகடிக்கின்றன. அதாவது காதி உபயோகிக்கும் வார்த்தைப் பிரயோகங்கள் பெண்களால் மாத்திரமல்ல செவி மடுப்போராலும் சகிக்க முடியாதுள்ளது. எனவே இந்நிலை மாறவேண்டும் இதற்கு அஞ்சிய பெண்கள் குடும்ப வாழ்க்கையில் வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாமல் தற்கொலை செய்து கொள்ள முயற்சிப்பதும், தற்கொலை செய்து கொண்டிருப்பதும் கண்கூடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே மனித உரிமைகள் மீறப்படுவதும் பெண்களுக்கு தனது பிரச்சினைகளைக் கூறவிடாது தடுத்து வார்த்தைகளால் அடிப்பது கூட பெண்கள் மனதில் பாரிய விரக்தியை ஏற்படுத்தி பல பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. சரீஆ சட்டம் என்ற பேரில் ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மனம் முடிப்பதும், விரும்பியபடி விவாகரத்துப்பண்ணுவதும் சமுதாயம் அறிந்த விஷயம். இதனால் பெண்களின் வாழ்க்கை மாத்திரமன்றி பிள்ளைகளின் வாழ்க்கையும் பாதிக்கப்படுகின்றது. காதி நீதிமன்றங்களில் இரு சாராருக்கும் நடுவராக ஒரே காதி நீதவான் இருந்து வழக்கு விசாரிப்பதால் அங்கே காட்டப்படும் பக்க சார்புகள் பெண்களையே மிகவும் பாதிக்கின்றது. இத்தகைய நிலை என்று மாறும்? இஸ்லாம் வளர வளர அதன் குறைபாடுகளும் திருத்தப்படல் வேண்டும். திருக்குர்ஆனை திருத்தம் செய்ய முடியாது. ஆனால் மனித மனங்களில் உள்ள மிருகக் குணங்களைத் திருத்த முடியும், மாற்ற முடியும். இந்த மாற்றங்களில் தான் பெண்களின் வாழ்க்கையில் ஏற்றம் உள்ளது. பல சமுதாய சீர் கேடுகளை ஒழிக்க முடியும். காதி நீதிமன்றங்களில் தலைவிரித்தாடும் பாரபட்சங்கள் ஒழிய வேண்டும். பெண்கள் விடயங்களில் அரசாங்க நீதிமன்றங்களைப் போல காதி நீதிமன்றங்களிலும் கரிசனை காட்ட வேண்டும். அவசரமாக வழங்கப்படும் தீர்ப்புக்களை அரசாங்க நீதிமன்றங்கள் போல தாமதித்து வழங்கினால் இடைப்பட்ட காலங்களில் பல மனங்கள் மாற வாய்ப்புக்கள் உள்ளது.

இன்று மட்டுமல்ல அன்று முதல் காதி நீதிமன்றங்களில் மனிதபிமானங்கள் அற்றுப்போய் விட்டுள்ளது. எங்கு மனிதபிமானம் அற்றுப் போய் விடுகின்றதோ அந்த இடத்தில் பக்க சார்புகளும், பாரபட்சங்களும் தலைவிரித்தாடும். தவறான தீர்ப்புக்கள் சிலவேளை தற்கொலைகளில் முடிந்துள்ளது வேதனைக்குரிய விஷயம்.

எனவே மனிதமனங்கள் திருந்த வேண்டும் வாழ்க்கை வாழ்வதற்கே. அநாகரீகங்கள் முஸ்லிம்கள் மத்தியில் இருக்கும் வரை அனாச்சாரங்கள் தொடர்வதைக் காணலாம். எனவே காதி நீதிமன்றங்கள் பெண்கள் விஷயங்களில் கரிசனை காட்டினால் முஸ்லிம்கள் மத்தியில் உள்ள தற்கொலைகளை இல்லாதொழிக்கலாம் என்பது திண்ணம்.

திருமணத்தின் மூலம் ஏற்படும் ஒரே நலன் வயதானோர் குழந்தைகளை உருவாக்குகின்றனர் என்பதல்ல. குழந்தைகள்தான் வயதானவர்களை உருவாக்குகின்றனர்.

— வாஸ் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள்!

# தம்புள்ள முதல் ....

- : சாரணா கையூம் : -

தம்புள்ள முதல்
தெதுரு ஓயா வரை
ஒரு நவீன பாணியில்
அராஜக நாடகம்
அரங்கேறி வருகிறது!

உலகெங்கும்,
உம்மத்தோர்
அகதிகளாய்
அநாதைகளாய்
அலைகின்றனர்;

பௌத்தம் பேசும்
மியன்மாரில்
முஸ்லிம் ஏழைகள்
சொல்லொணாக்
கொடுமைக்காளாகி,

புலம் பெயர்ந்து
புலம்புகின்றார்;
பிள்ளையைக் கிள்ளித்
தொட்டிலை ஆட்டும்
அரசியலுக்கு
அடிமை ஆகி,


ஆட்டம் போடும்
அடிவருடிகளை
அடையாளங் காணத்
தவறிப் போனோம்!

சமயங்கள்,
மக்கள் மத்தியில்
சாந்தியையும்
சமாதானத்தையும்
உறுதிப்படுத்தவே
உருவானது, அதை
அறியாத மதவாதிகள்

அப்பாவி மக்களை
ஏவிவிட்டு, மகா
நாயக்கர்களாய்
நடிப்பதில், கை
தேர்ந்துவிட்டார்!

உணர்ச்சியற்ற
முண்டங்களாய்
உறங்குகின்ற
உம்மத்தோரே,
வரலாற்றுப் படிப்பினைகள்
விடிவுக்கு வழிகாட்டும்!

விழித்தெழுங்கள்
தர்மம் வெல்லும்!
அதர்மம் அழியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரவனின் பேரொளியை கையால் மறைப்பாரோ

எங்களின் எதிரிகள் எங்களை நோக்கி
எதிரிகளையும் AK-47யும்
வைத்துக்கொண்டிருக்கிறார்கள்
நாங்களோ .......

மொட்டை வாளுடன் முனை ஒடிந்த ஈட்டியுடன்
பொட்டைக் குதிரையுடன்
போர்க்களத்தில் நிற்கின்றோம்?

விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்திட்ட முன்னவர்கள்
மெய்ஞானந்தன்னை மேதினிக்கச் சொன்னவர்கள்

அறிவியலின் வளர்ச்சி அல்லாஹ்வின் ஆற்றலினை
விரிவாக மானிடர்க்கு விளங்க வைத்திருக்க

காலமறிந்து களத்தினிலே குதிக்காமல்
ஏலுமா இயலாதா என்ற பெரும் ஆராய்ச்சி

எதிரிகளின் தாக்குதலை எப்படியும் முறியடிக்க
புதிது புதிதாக போருத்தி கையாள்வோம்

ஆயுதத்தால் இஸ்லாத்தை அழிக்கமுடியாது
தோற்றுப் போயுள்ளவர்கள் தொடங்கியுள்ள புதிய யுத்தம்

எதிரிகளின் கையிலுள்ள இலத்திரன் ஊடகத்தால்
விரித்த வலையமைப்பால் வீழ்த்தி விட எண்ணுகிறார்

இஸ்லாத்தின் புனிதத்தை இறைத்தூதர் வாழ்க்கையினை
பரிசுத்த மாமறையை பலவாறு தூஷித்து
சாத்தான்கள் எம்முடனே சமர்செய்ய வருகின்றார்

ஆற்றலுடன் நாங்கள் அதனை எதிர்கொள்வோம்
மாற்று மதத்தினரை மனம்நோகச் செய்வதையும்
அவர் வணங்கும் தெய்வங்களை அவமதித்து திட்டலையும்

எங்கள் இறையும் ஏந்தல் நபி பெருமானும்
தடை செய்து உள்ளார்கள் தரங்கெட்டோர் நாமல்ல

கதிரவனின் பேரொளியை கையால் மறைப்பதற்கும்
சத்தியத்தைப் பொய்யாய் தடமாற்றிக் காட்டிடவும்
எத்தர்களால் மண்ணில் என்றும் முடியாது

சுட்டெரிக்கும் போது சுடர்கின்ற தங்கமதாய்
எட்டும் திசையும் இஸ்லாம் ஒளிர்கிறது

என்றாலும் நாங்கள் இறையளித்த ஆற்றல்களை
நவீன வசதிகளை நன்கு பயன்படுத்தி
புவியோர்க்கு இஸ்லாத்தின் புனிதத்தை விளக்கிடுவோம்

பழிக்குப் பலி எமது பகைவர்களின் இரத்தமல்ல
ஒளிகாட்டி அழைப்போம் உண்மை விளங்கட்டும்

கத்தியில்லா இரத்தமில்லா யுத்தமிது இச்சமரில்
சத்தியமே வெல்லும் சாத்தான்கள் கூட்டமெலாம்
செத்தொழிந்து போகும் தீன் மட்டும் நிலைத்து நிற்கும்

- மன்னார் உமா அபூ பக்கர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனை வணங்கிடுங்கள்

கல்வியே கருந்தனமாய் கருத்தாய்ச் சிந்தையில்
கனமாய்ப் பதித்திடுங்கள்.
நல்லிதய நோக்குடன் கர்வங்களகற்றி
நன்மையைச் செய்திடுங்கள்!

தித்திப்பாயிருந்திட திறமையோடுக்கமாய்
தினம் சென்று கற்றிடுங்கள்.
புத்தியாய் வாழ்வினில் புகழுக்கேங்கிடா
புதுமைகள் செய்திடுங்கள்!

இளமைசேர் வாழ்விலேயின்னல்கள் நீங்கிட
இறைவனை நினைத்திடுங்கள்.
வளமிகு அறிவதும் நிறைநிம்மதியதும்
வாய்த்திட நடந்திடுங்கள்!

உலகிலுயர்ந்திட்ட உத்தமர் வரிசையில்
உயர்ந்திடப் பணிசெய்யுங்கள்.
நலவினை நவின்றிடும் நல்லோர் தங்களை
நாளெல்லாம் போற்றிடுங்கள்!

எம்மவர் பணிபல நாட்டில் பரந்திட
ஏற்றமாயுழைத்திடுங்கள்.
இம்மை மறுமையில் இன்னல்கள் நீங்கிட
இறைவனை வணங்கிடுங்கள்!

– மருதூர் ஜமால்தீன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாஸாவில் தடுக்கப்பட்டவை

- அடக்கஸ்தலங்களை கற்களைக்கொண்டு கட்டுவது.
- அதைச்சுற்றிலும் மதில் கட்டுவது, அல்லது அவைகளை சம அளவை விட உயர்த்துவது.
- அடக்கஸ்தலங்களின் மேல் உட்காருவது.
- செருப்புகளை அணிந்து அடக்கஸ்தலங்களுக்கு மத்தியில் நடப்பது.
- அடக்கஸ்தலங்களில் பெயர் எழுதுவது.
- அடக்கஸ்தலங்களில் விளக்கு எரிப்பது. அடக்கஸ்தலங்களைத் தோண்டுவது.
- அடக்கஸ்தலங்களை பள்ளிவாயிலாக மாற்றுவது.
- ஜனாஸா தொழுகையைத் தவிர மற்றவைகளை அடக்கஸ்தலங்களில் தொழுவது.
- ஒப்பாரி வைப்பது.
- ஒப்பாரி வைக்கத் தூண்டுவது.
- அதற்காக இறந்தவர் வீட்டில் ஒன்று கூடுவது.
- ஒப்பாரி வைக்கும் பெண்ணை கூலிக்கு அமர்த்துவது.
- கன்னத்தில் அறைந்துக்கொள்வது.
- தலைமுடியை அவிழ்த்துக்கொள்வது. அதனை விரித்துப்போட்டுக் கொள்வது.
- இரங்கள் கூட்டங்கள் நடத்துவது.
- காபிர்கள் போன்று இறப்பு செய்தி அறிவிப்பது. (உதாரணமாக : துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் மூலமாக அறிவிப்பது) அவ்வாறின்றி பொதுவாக அறிவிப்பு செய்வது கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித நோன்பு

உண்மை முஸ்லிம் ரமழான் மாதத்தில் ஈமானுடனும் நன்மையை நாடியும் நோன்பு நோற்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்; "எவர் ஈமானுடனும் நன்மையை நாடியும் ரமழானில் நோன்பு நோற்கிறாரோ அவரது முந்திய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்." (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

அவர் நோன்பின் மாண்புகளைப் புரிந்து நோன்புக்கு பொருத்தமற்ற, நன்மையை அழித்துவிடும்படியான அனைத்து தவறுகளிலிருந்தும் தனது நாவு, கண் மற்றும் அனைத்து உறுப்புகளையும் பாதுகாத்துக் கொள்வார்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்; "உங்களில் ஒருவர் நோன்பு நோற்றிருந்தால் அருவருப்பான பேச்சுகளைப் பேசவேண்டாம், கூச்சலிட வேண்டாம். எவரேனும் திட்டினால் அல்லது சண்டையிட்டால் 'நான் நோன்பாளி' என்று அவர் கூறட்டும்." (ஸஹீஹுல் புகாரி)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்; "எவர் பாவமான சொல், செயலிலிருந்து விலகிக்கொள்ளவில்லையோ அவர் உணவு, பானத்தைத் தவிர்ப்பதில் அல்லாஹ்வுக்கு எவ்விதத் தேவையுமில்லை."

(ஸஹீஹுல் புகாரி)

தன்னை நிழலிட்டுள்ள இம்மாதம் ஏனைய மாதங்களைப் போன்றதல்ல. இது நோன்பின் மாதம். நோன்பு அல்லாஹ்வுக்குரியது. அவனே கூலி கொடுக்கிறான். எவ்வித தேவையுமற்ற உபகாரியான அல்லாஹ்வின் கூலி மகத்தானது, பூரணமானது, விசாலமானது என்ற உறுதியான நம்பிக்கை நோன்பாளியின் மனதிலிருந்து மறைந்துவிடக் கூடாது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்; "ஆதமுடைய மகனின் அனைத்து நற்செயலுக்கும் பத்திலிருந்து இரட்டிப்பான எழுநூறு மடங்குவரை நன்மையளிக்கப்படும். அல்லாஹ் கூறுகிறான்; "நோன்பைத் தவிர, அது எனக்குரியது. நானே அதற்கு கூலி கொடுக்கிறேன். அவன் மனோ இச்சையையும் உணவையும் எனக்காகவே விலக்கினான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உண்டு நோன்பு திறக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சி; மறுமையில் தனது இறைவனை சந்திக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சி.

நோன்பாளியின் வாயிலிருந்து வரும் வாடை அல்லாஹ்விடம் கஸ்தூரியின் வாசத்தைவிட மணமிக்கது'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

இதனால் மார்க்கப் பற்றுள்ள முஸ்லிம் பரக்கத் பொருந்திய இம்மாதத்தின் நேரங்களை பொன்னாகக் கருதி, அதன் பகல் காலங்களில் நோன்பு, தொழுகை, குர்ஆன் ஓதுதல்,தர்மம் செய்தல் போன்ற நற்காரியங்களிலும் இரவுகளில் தஹஜ்ஜத் தொழுகை மற்றும் துஆவிலும் ஈடுபடவேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்;''எவர் ரமழான் மாதத்தில் ஈமானுடனும் நன்மையை நாடியும் நின்று வணங்குகிறாரோ அவரது முன் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்.'' (ஸஹீஹுல் புகாரி)

நபி (ஸல்) அவர்கள் ரமழானில் மற்ற காலங்களைவிட மிக அதிகமாக வணக்கம் புரிபவர்களாக இருந்தார்கள். அதிலும் ரமழானின் இறதிப்பத்தில் மிக அதிகமாக வணக்கம் புரிந்து வந்தார்கள்.

அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிப்பதாவது; ''நபி (ஸல்) அவர்கள் மற்ற மாதங்களைவிட ரமழானில் அதிகமாக அமல் செய்வார்கள். குறிப்பாக ரமழானில் ஏனைய நாட்களைவிட பிந்திய பத்து நாட்களில் அதிகம் அமல் செய்வார்கள்.'' (ஸஹீஹ் முஸ்லிம்)

அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் கூறினார்கள்; ''நபி (ஸல்) அவர்கள் ரமழானின் கடைசிப் பத்தில் நுழைந்துவிட்டால் முழு இரவும் வணங்குவார்கள், குடும்பத்தினரையும் விழிக்கச் செய்வார்கள், தங்களது ஆடையை இறுக்கக் கட்டி உற்சாகத்துடன் வணக்கத்தில் ஈடுபடுவார்கள்.''

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் லைலத்துல் கத்ரைத் தேடுமாறு ஏவுவார்கள். ''ரமழானின் கடைசிப் பத்தில் லைலத்துல் கத்ரைத் தேடிக்கொள்ளுங்கள்.''

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

என்று கூறி அந்த இரவில் நின்று வணங்க ஆர்வமூட்டுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கூறினார்கள்; "ரமழானின் கடைசிப் பத்தில் ஒற்றைப்படை இரவுகளில் லைலத்துல் கத்ரைத் தேடிக்கொள்ளுங்கள்."

(ஸஹீஹுல் புகாரி)

மேலும் கூறினார்கள்; எவர் லைலத்துல் கத்ர் இரவில் ஈமானுடனும் நன்மையை நாடியும் நின்று வணங்குவாரோ அவரது முன்பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்."
(ஸஹீஹ் முஸ்லிம்)

இதனால்தான் மகத்துவமிக்க இம்மாதம் தூய்மையான வணக்கங்கள் புரிவதற்கு ஏற்ற மாதமாகத் திகழ்கிறது. இம்மாத இரவுகளில் வீண் விளையாட்டுகளில் ஈடுபட்டு நீண்ட நேரம் விழித்திருந்துவிட்டு, ஃபஜ்ரு நேரம் உதயமாவதற்கு சற்றுமுன் சில கவளங்களைச் சாப்பிட்டுவிட்டு, படுக்கைக்குச் சென்று ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கி, ஃபஜ்ருத் தொழுகையைத் தவறவிடுவது முஸ்லிமுக்கு சற்றும் பொருத்தமற்ற செயலாகும்.

இறையச்சமுள்ள, மார்க்க நெறிகளை அறிந்த முஸ்லிம் தராவீஹ் தொழுகையை முடித்துவிட்டால் விழித்திருக்காது உறங்கச் செல்ல வேண்டும். சிறிது நேர தூக்கத்திற்குப் பிறகு இரவுத் தொழுகைக்காக எழுந்து தொழுதுவிட்டு ஸஹருடைய உணவை உண்ண வேண்டும். பின்னர் ஃபஜ்ருத் தொழுகையை நிறைவேற்ற பள்ளியை நோக்கிச் செல்ல வேண்டும்.

ஸஹர் உணவில் மிக அதிகமான நன்மைகள் இருப்பதால் நபி (ஸல்) அவர்கள் அதை வலியுறுத்தி, "ஸஹர் செய்யுங்கள்! நிச்சயமாக ஸஹர் உணவில் பரக்கத் இருக்கிறது" என்று கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

காரணம் என்னவெனில், ஸஹர் நேரத்தில் விழித்தெழுவது இரவில் நின்று வணங்க வாய்ப்பை ஏற்படுத்தும். ஃபஜ்ரு தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவதற்காக உற்சாகத்துடன் பள்ளியை நோக்கி நடக்கச் செய்வதுடன், நோன்பு நோற்க உடல் வலிமையையும் தருகிறது. இதை நபி (ஸல்) அவர்கள் தானும் செய்து தனது தோழர்களுக்கும் பயிற்சியளித்தார்கள்.

ஜைது இப்னு ஸாபித் (ரழி) அவர்கள் "நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் ஸஹர் உணவை உண்டோம். பிறகு தொழுகைக்குச் சென்றோம்" என்று கூறினார்கள். ஒருவர் "அந்த இரண்டுக்கும் மத்தியில் எவ்வளவு நேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இடைவேளி) இருந்தது?" என்று கேட்டார். "50 ஆயத்துகள் (ஓதும் நேரம்)" என ஜைது (ரழி) பதிலளித்தார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

## பார்வையில் பேணுதல்

ஹஜ்ரத் உம்மு ஸலமா (ரலி) அறிவிக்கிறார்கள்; நானும் மைமூனா (ரலி) அவர்களும் நபி (ஸல்) அவர்களிடம் இருந்தோம். (அவர்களிருவரும் நபி (ஸல்) அவர்களின் மனைவியராவர்) அப்பொழுது, ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் உம்மி மக்தூம் (ரலி) அவர்கள் வந்தார்கள். (அவர் பார்வையற்றவர்) அது "ஹிஜாப்" (கோஷா – பர்தா) முறையைக் கொண்டு எங்களுக்கு ஏவப்பட்ட பின்னராக இருந்தது. அப்பொழுது நபி (ஸல்) அவர்கள், "நீங்கள் இருவரும் அவரை விட்டும் மறைந்துக்கொள்ளுங்கள்," எனக் கூறினார்கள். அதற்கு நாங்கள் "யாரஸூலல்லாஹ்! அவர் குருடராக இல்லையா! அவர் எங்களைப் பார்க்கவும் முடியாது, எங்களை அறிந்து கொள்ளவும் முடியாது" என்று கூறினோம். அதற்கு, நபி (ஸல்) அவர்கள் "நீங்கள் இருவரும் பார்வையற்றவர்களா? நீங்கள் இருவரும் அவரைத் பார்க்கமாட்டீர்களா?" எனக் கூறினார்கள்.

(அபூதாவூது, திர்மிதி)

கணவன் இறந்துவிட்ட பெண் இத்தா காலம் வரை நறுமணம் பூசுவதோ, சுர்மா இடுவதோ, மருதானி போடுவதோ, நகைகள் அணிவதோ, அலங்காரமான ஆடைகள் அணிவதையோ தவிர்க்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் பூங்கா சிறுகதை

# குடி குடியைக் கெடுக்கும்

– ஜாமிஆ மாணவன் எம்.நிஸ்தார் ஹுஸைன். –
வறகாமுறை.

மாத்தளை என்ற ஓர் அழகிய மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு ஊரில் கமால்தீன் எனும் ஒருவர் இருந்தார். இவர் இளம் வயதில் மிகவும் ஓர் நல்ல மனிதனாக இருந்தார். இவருக்கு நுஸ்லா என்ற ஒரு பெண்ணை திருமணத்துக்காக முடிவு செய்யப்பட்டது. திருமணத்துக்காக நாற்களும் குறிக்கப்பட்டது. மக்களின் நல்வாழ்த்துக்களோடு இவருடைய திருமணம் அல்லாஹ்வின் உதவியால் மிகவும் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. ஓர் இரு வருடங்களுக்குப் பின்னால் ஓர் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. குழந்தைக்கு ஐந்து வயது இருக்கும்போது கமால்தீன் தன்னுடைய தேவைகளையும் தன்னுடைய வாழ்க்கை கஷ்டங்களையும் அறிந்து வெளிநாடு செல்வதற்கு முடிவெடுத்தார். கண்கலங்க கண்ணீர் பெருக அன்று காலை புதன் கிழமை வெளிநாடு செல்வதற்காக வேண்டி குடும்பத்தினர்களை விட்டுப் பிரிந்தார். அவர் வெளிநாடு சென்றதற்குப் பின்னால் அவர் குடும்பத்தினர்களை விட்டு பிரிந்தாலும் அக் குடும்பத்தினரின் நினைவுகளை விட்டு பிரியவில்லை. என்ன நடந்தாலும் அவர் தன்னுடைய வேலையில் கண்ணும் கருத்தாக இருந்தார். இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை தனது குடும்பத்தினர்களை பார்ப்பதற்கு வேண்டி வந்து செல்வார். இவ்வாறு 10 வருடங்கள் கழிந்து ஓடியது. அந்த காலபொழுதில் அவருக்கு சவுதியில் தனது ஊரை சேர்ந்த சில நண்பர்கள் கிடைத்தார்கள். அவர்களுடன் சேர்ந்து இஸ்லாம் அனுமதிக்காத ஹராமானவைகளை செய்தார். தனது மார்க்கத்தை விடவும் தனது குடும்பத்தினர்களையும் விடவும் அவருக்கு அந்த கெட்ட பழக்கம் அதிகம் நேசமானது தனது நாடு திரும்பிய பிறகும் அந்த பழக்கம் அவரை விட்டு நகரவில்லை. அவர் சவுதியில் இருந்து சம்பாதித்த பணத்தில் அவருடைய மனைவி சிறிய கடை ஒன்றை வைத்திருந்தார். அந்தக் கடையில் சில வேளைகளில் ஏழை மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் கொடுக்கல் பழக்கம் இருந்தது. ஒரு நாள் அவர் கடன் கொடுக்கல் வாங்கும் கொப்பியை அவர் பார்வையிட்டு விட்டார். இதனால் அவர் மதுபானத்தை அருந்திவிட்டு வந்து தனது மனைவியையும் அடித்துவிட்டு சில மனம் தாங்காத அவதூறுகளையும் கூறினார். இதனால் கோபம் அடைந்த மனைவியின் சகோதரர்கள் அவரை அடித்து விட்டார்கள். இதனால் கடுமையாக தாக்கப்பட்ட காரணத்தால் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். காலையில் நோன்பு பெருநாளாக இருந்தது. அன்று இரவுதான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சந்தோஷமான நாளில் அந்த நாளை சிந்தித்து தன்னுடைய நிலைமையையும் சிந்தித்து வருந்திய அவர் தனது குடிப்பழக்கத்தைவிட்டார். இப்பொழுது அவர் கமால்தீன் சாப் என்று அழைக்கப்படும் அளவிற்கு அவர் நல்லவராக வாழ்கின்றார்.

வாழ்வில் மேன்மைப் பெற சிறந்த வழி ஹலாலான வழியில் கடுமையாக உழைப்பது.

கெட்டவர்களிடம் நட்பு வைத்திருந்தவன் தனது மார்க்கம் நிலைத்திருக்கும் என நினைத்தும் பார்க்கவேண்டாம்.

17ம் பக்க தொடர்ச்சி ......

(புகாரி, முஸ்லிம்)
அறிவிப்பவர் : அபூ மூஸா அல் அஷ்அரீ (ரழி)

இந்த குர்ஆன், மேன்மையும் மாட்சிமையும் அதிகாரமும் உடைய அல்லாஹ்வின் வார்த்தைகள் என்ற ஆழ்ந்த விசுவாசத்துடன் இதனை ஓத முயற்சிக்க வேண்டும். சாதாரண ஏனைய நூள்களை வாசிப்பது போன்ற மனோநிலையிடன் இதனை ஓத முற்படக் கூடாது. இதன் ஒவ்வோர் எழுத்தும் சொல்லும் வாக்கியமும் சுத்தமாக எம்மை நோக்கி அவனால் கூறப்படும் வாக்கியங்கள் என்ற மனோநிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று வளாகம்

## ஸலமத்துப்னு அக்வ.ஃ. (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் வீரம்

மதீனாவிலிருந்து நான்கு அல்லது ஐந்து மைல் தூரத்தில் காபா என்றொரு கிராமம் இருந்தது. அவ்விடத்தில் ரஸுலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களுடைய சில ஒட்டகங்கள் மேயவிடப்பட்டிருந்தன. அப்துர் ரஹ்மான் பஜாரீ என்பவன் காபிர்களுடைய ஒரு கூட்டத்தாருடன் அங்கு வந்து ஒட்டகம் மேய்த்துக் கொண்டிருந்தவரைக் கொலைசெய்துவிட்டு அந்த ஒட்டகங்களையும் கொள்ளையடித்துச் சென்று விட்டான்.

இந்தக் கொள்ளைக் கூட்டத்தினர் ஆயுதங்களுடன் குதிரைகளின் மீது வந்திருந்தனர். எதிர்பாராத விதமாக ஸலமத்துப்னுல் அக்வ.ஃ. (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அன்று சுப்ஹு நேரத்தில் வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டு '.ஃ.காபா' என்ற அந்த இடத்தின் பக்கமாக நடந்து வந்துகொண்டிருந்தார்கள். திடீரென அவர்களின் பார்வை அக்கொள்ளைக் கூட்டத்தினர் மீதுபட்டது. அவர்கள் சிறுபிராய முடையவராகவும், மிகவேகமாக ஓடுபவராகவும் இருந்தார். அவர்களுடைய ஓட்டம் முன்னுதாரணம் காட்டப்படும் அளவுக்கு மிகப் பிரபலமானதாக இருந்தது. வேகமாக ஓடும் குதிரையைக் கூட இவர் ஓடிச்சென்று பிடித்து விடுவார். இவருடைய ஓட்டத்தைக் குதிரைகூட பிடிக்க முடியாது என்று இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் அம்பெய்வதிலும் மிகப் பிரபலமானவர்களாக இருந்தார்கள்.

கொள்ளைக்கூட்டத்தினரைக் கண்ட ஸலமத்துப்னுல் அக்வ.ஃ. (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள், அருகிலிருந்த ஒரு மலையின் மீது ஏறி மதீனாவின் பக்கம் திரும்பி நின்று கொள்ளையடிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சியைப் பற்றி உரக்கச் சப்தமிட்டு அறிவித்துவிட்டு, வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டு அந்தக் கொள்ளைக் கூட்டத்தினரைப் பின் தொடர்ந்து ஓடினார்கள். அவர்களுக்கு அருகினில் சென்றவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை நோக்கி அம்புகளை எய்யத் தொடங்கினார்கள். ஒரே சமயத்தில் பல அம்புகளைச் சரமாரியாக எய்ய ஆரம்பித்தவுடன் ஒரு பெருங் கூட்டத்தினர் அம்பெய்கின்றனர் என்பதாக அக்கொள்ளைக் கூட்டத்தினர் எண்ணிக்கொண்டனர். ஆனால், ஸலமா (ரலியல்லாஹு அன்ஹு) தனி நபராகவும் வாகனமின்றி நடந்து செல்வராகவும் இருந்தார்கள்.

ஆகையால், அக்கொள்ளைக் கூட்டத்தாரில் ஒருவன் தன் குதிரையை அவர்களின் பக்கம் திருப்பிக் கவனிக்க ஆரம்பித்தான். அவர்கள் ஒரு மரத்திற்குப் பின்னால் ஒளிந்து கொள்வார்கள். அவ்வாறு மறைந்து கொண்டே அவனுடைய குதிரையை நோக்கி அம்பெய்வார்கள். அடிப்பட்ட குதிரை காயமுற்றுத் தடுமாறும்பொழுது குதிரை மீதிருப்பவன் குதிரை கீழே விழுந்துவிட்டால் நாம் பிடிபட்டுவிடுவோம் என்று பயந்து அக் குதிரையை ஓட்டிக்கொண்டு திரும்பிச் சென்றுவிடுவான்.

ஸலமத்துப்னுல் அக்வ.'. (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களே கூறுகிறார்கள்; அவர்கள் குதிரைகளின் மீது வெருண்டோடிக் கொண்டே இருந்தனர். நானும் அவர்களைப் பின் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருந்தேன். அதனால் அவர்கள் கொள்ளையடித்துச் சென்ற ஒட்டகங்கள் எல்லாம் எனக்குப் பின்னால் தங்கிவிட்டன. அது மட்டுமின்றி அவர்கள் ஓடுகின்ற வேகத்தில் முப்பது ஈட்டிகள், முப்பது போர்வைகள் ஆகியவற்றையும் விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள்.

அந்த நேரத்தில் உயைனா பின் ஹிஸ்ன் என்பவனுடன் ஒரு கூட்டத்தினர் அக்கொள்ளையருக்கு உதவி செய்ய வந்து சேர்ந்து விட்டனர். இதனால் அவர்களுடைய பலம் அதிகமாகி விட்டது. அத்துடன் நான் தனிமை யிலிருப்பதும் அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. உடனே என்னைப் பிடிப்ப தற்காக பல நபர்கள் என்னை நோக்கி ஓடிவந்தனர்.

நான் ஒரு மலையின் மீது ஏறிக்கொண்டேன். அவர்களும் என்னைப் பின் தொடர்ந்து ஏறி வந்தனர். அவர்கள் என்னருகில் வந்தவுடன், சற்று அப்படியே நில்லுங்கள். நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். நான் யாரென்று உங்களுக்குத் தெரியுமா? என்று உரக்கச் சப்தமிட்டுக் கூறினேன், 'நீயார்? சொல்' என்று அவர்கள் கேட்டார்கள். நான் அக்வ.'. உடைய மகன் ஸலமா என்பவன். முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு கண்ணியமளித்த அந்தப்பரிசுத்த நாயனின் மீது சத்தியமாக, உங்களில் எவரேனும் ஒருவர் என்னைப் பிடிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென நினைத்தால் எவரும் என்னைப் பிடித்துவிட முடியாது. உங்களில் எவரேனும் ஒருவரை நான் பிடிக்க வேண்டுமென்று நினைத்தால் என்னை விட்டும் அவர் ஒரு போதும் தப்பிவிட முடியாது என்று கூறினேன். ஸலமா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களைப்பற்றி, வேகமாக ஓடும் அரபிக் குதிரை கூட அவர்களுடைய ஒட்டகத்துடன் போட்டியிட முடியாது' என்பது எங்கும் பிரபலமாக பேசப்படும் செய்தியாகும். எனவே அவர்கள் இவ்வாறு கூறியதும் அற்புதமல்ல.

மேலும்,ஸலமா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுவதாவது; நான் அவர்களுடன் இவ்வாறு பேச்சுக் கொடுத்துக் கொண்டே இருந்ததின் நோக்கம் என்னவென்றால், அவர்களுக்கு உதவி வந்ததைப் போலவே முஸ்லிம்களிடமிருந்து எனக்கும் உதவி வரும் என்பதை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தேன். ஏனெனில், நான் மதீனாவை நோக்கி அறிவிப்புச் செய்துவிட்டு வந்திருந்தேன். இவ்வாறு அவர்களுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டே மரங்களுக்கிடையில் மதீனாவின் வழியை நோக்கிக் கொண்டிருந்தேன். குதிரை வீரர்களின் ஒரு கூட்டம் வேகமாக வருவது என் பார்வையில் பட்டது. அவர்களின் முதலாவதாக அக்ரம் அஸதீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் வந்துக்கொண்டிருந்தார்கள்.

வேகமாக வந்த அக்ரம் அஸதீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் எதிரிகளிருக்கும் இடத்திற்கு வந்தவுடன் அப்துர் ரஹ்மான் ப.்.ஜாரி என்பவனைத் தாக்கினார்கள். அவனும் அவர்களைத் தாக்கினான். அவர்கள் குதிரையைத் தாக்கி அதனுடைய கால்களை வெட்டினார்கள். அதனால் குதிரையும் அவனும் கீழே வீழ்ந்தனர். கீழே விழுந்த அவன் அக்ரம் அஸதீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களை மீண்டும் தாக்கினான். அத்தாக்குதலால் அக்ரம் அஸதீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஷஹீதாகிவிட்டார்கள்.

உடனே அவன் அக்ரம் அஸதீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுடைய குதிரையின் மீது ஏறிக் கொண்டான். அப்பொழுது அவனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த அபூகதாதா (ரலியல்லாஹு அன்ஹு)அவர்களுடைய குதிரையின் கால்களை வெட்டினான். அதனால் அவர்கள் கீழே விழுந்தார்கள். விழுந்துகொண்டே அப்துர் ரஹ்மானைத் தாக்கினார்கள். அத்தாக்குதலால் அவன் வெட்டுண்டு இறந்தான். உடனே அபூகதாதா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அவன் ஏறியிருந்த, அக்ரம் அஸதீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுடைய குதிரையின் மீது ஏறிக் கொண்டார்கள். மற்றொரு அறிவிப்பில், ஸலமா (ரலியல்லாஹு அன்ஹு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அக்ரம் அஸதீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களைத் தடுத்து நிறுத்தி யாரையும் தாக்கவேண்டாம் சற்று நேரம் இருங்கள், நம்முடைய படையினர் வந்து சேரட்டும் என்று கூறியதாகவும் அதற்கு அவர் "நான் ஷஹீதாக வேண்டும் என்னை விட்டுவிடு" என்று கூறியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சண்டையில் முஸ்லிம்களில் அக்ரம் அஸதீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் மட்டுமே ஷஹீதானார்கள். காபிர்களில் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டனர். அதற்குப்பின் முஸ்லிம்களில் ஒரு பெரும் படையினர் வந்து சேர்ந்தார்கள். காபிர்கள் அனைவரும் ஓடி விட்டனர்.

அப்பொழுது ஸலமத்துப்னுல் அக்வ.'. (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்து, என்னுடன் நூறு ஸஹாபாக்களை அனுப்பி வைத்தால் நான் அந்தக் காபிர்களைப் பின்தொடர்ந்து சென்று போரிடுகிறேன் என்று கூறினார்கள். அதற்கு நபியவர்கள் 'அவர்கள் தங்கள் கூட்டத்தாருடன் போய்ச் சேர்ந்து விட்டார்கள், செல்ல வேண்டாம்' என பதிலளித்து விட்டார்கள்.

அதிகமான சரித்திர நூல்களின் மூலமாக தெரியவருகிறது, ஹஜ்ரத் ஸலமா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு அந்த நேரத்தில் பன்னிரண்டு, அல்லது பதின்மூன்று வயதுதானிருக்கும். அவ்வளவு இளம் வயதுச் சிறுவர் தனிமையாக, குதிரை வீரர்களில் ஒரு பெருங்கூட்டத்தினரை அவர்களுடைய புலன்கள் ஒடுங்கி விடுமளவுக்கு ஓட ஓட விரட்டியது மட்டுமல்லாமல், அவர்கள் கொள்ளையடித்த பொருட்களை விட்டுவிட்டு, அவர்களுடைய பொருள்களையும் போட்டு விட்டு ஓடுமளவுக்குச் செய்தது அவர்களுக்கு அல்லாஹுதஆலா வழங்கியிருந்த விசேஷமான இக்லாஸ் என்னும் மனத்தூய்மையின் பரக்கத்தினால் ஏற்பட்ட நிகழ்ச்சியாகும்.

மூன்று நபர்களை அல்லாஹ் மறுமையில் பார்க்கமாட்டான். அவர்களைத் தூய்மைபடுத்தவும் அவர்களுக்கு நோவினை தரும் வேதனையுமுண்டு. அவர்கள்; உபகாரத்தைச் சொல்லிக் காண்பிப்பவன், கரண்டை காலுக்கு கீழ் ஆடை அணிபவன். போய் சத்தியம் செய்து பொருளை விற்பவன்.

- முஸ்லிம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஷரீஆ' சட்டம்

- சாரணா கையூம் -

இதழின் இதயக் கசிவை யதார்த்த பூர்வமாய் இதுவரை எவரும் விமர்சித்ததில்லை. 'சவூதி அரேபியா' என்றதும் ஒருவித பக்தி, புனித பூமியல்லவா? தேன் மணம் கமழும் ரோஜா சோலையல்லவா? அதை யாருக்குதான் மறுக்கமுடியும்.

இன்று அரேபியா மக்கள் மத்தியில் ஒரு மேலெண்ணம் தலை தூக்கியுள்ளதை எண்ணிப் பார்க்கும் போது, வேதனையாகவும் விசனமாகவும் இருக்கின்றது.

முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண்ணின் கண்ணியம் எடுபட்டு, சீரழிவதைப் பார்க்கும்போது, ஜாஹிலியாப் பக்கம் திசை திரும்புகின்றதோ என்ற ஐயம் தோன்றுகின்றது.

யூதர்கள் சொல்வது போல் - 'நாங்கள் சுவர்க்கவாசிகள்' ஏனையோர் நரகவாசிகள்' என்ற ஒரு போக்கு சவூதியர்களிடம் உருவாகி வருகின்றது.

'ஷரீஆ' சட்டம் சவூதியில் அரபிகளுக்கு ஒரு விதமாகவும் ஏனையோருக்கு ஒரு விதமாகவும் நடத்தப்படுவது கண்கூடு.

எஜமான் தவறு செய்தால், அது தவறாகக் கணிக்கப்படுவதில்லை. விசாரணைகளும் பாரபட்சமாகவே நடக்கின்றது.

அண்மையில் நடந்த ரிஸானாவின் மரண தண்டனை சரியான முறையில் விசாரிக்கப்படவில்லை என்பதே ஏகோபித்த முடிவாகும்.

ரிஸானாவின் எஜமானி ஒரு முஸ்லிம் பெண்ணே அல்ல. இரக்கமற்ற அரக்கக் குணமுள்ள ஒரு அடங்காபிடாரியாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவூதி அரேபியா பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை இரக்கமற்ற முறையிலே வெளியேற்றிய நாடல்லவா? அந்த மூர்க்கத்தனமான போக்கை இன்றும் காணக்கூடியதாகவுள்ளது.

பெண்களைக் கொத்தடிமைகளாக விலைக்கு வாங்கி, பல வழிகளிலும் துன்புறுத்தும் எஜமான், எஜமானிகளுக்கு 'ஷரீஆ' சட்டம் எந்த அளவுக்கு அமுலாக்கப்படுகின்றது?

(எஜமான் பலாத்காரம் செய்தால், அதற்கு ஒரு ஷரீஆ. எஜமானி வேலையாளை பலாத்காரம் செய்தால் அதற்கொரு 'ஷரீஆ'வா?) 'ஷரீஆ' இறைச்சட்டம். அதில் பாரபட்சம் காட்டவியலாது.

'மஹ்ரம்' அல்லாத வீடுகளில் பணிப்பெண்களை வேலைக்கமர்த்துவது, 'ஷரீஆ'வில் அனுமதிக்கப் பெற்றதா? இன்று சர்வ சாதாரணமாக வயது கட்டுப்பாடு இன்றி வேலைக்கமர்த்தப்படுகின்றார்கள். இதனால் ஏற்படும் விபரீதங்கள் ஒன்றல்ல.

சில பெண்கள் இருபது வருடங்களுக்கு மேலாகப் பணிப்பெண்களாக இருந்து வருகின்றார்கள். அவர்களுக்கு எஜமானிகளுக்கில்லாத சலுகைகள் தரப்படுகின்றது. இதிலிருந்து புரிந்து கொள்ளக் கூடியதென்ன?

சவூதிக்காரனுக்கு உண்டு கொழுத்து உபரிகையிலே வாழும் ஆசை மிகைத்துவிட்டது. அதனால், அவனுக்கு எதுவும் கண்ணில்படுவதே இல்லை.

தாழ்வுணர்ச்சி வேண்டாம். அனைத்தையும் வெல்ல முடியும். வெற்றியைப் பற்றிய சிந்தனையுடன் செயல்படுங்கள். தோல்வி, வெறுப்பு, அவநம்பிக்கை, ஆகியவற்றிற்கு இடமளிக்காமல், வெற்றியை மட்டுமே சிந்தித்து உயர்வடையுங்கள்.

– ஸ்வார்ட்ஸ் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுக்கிய முத்துக்கள்

- ஊரார் வீடுகளையெல்லாம் தன் வீடுகளாக்கமுயல்பவனுக்கு தனக்கு ஒரு வீடு இல்லாத நிலை ஏற்படும். – இந்தியா –

- முதுமையில் ஊன்றிக்கொள்ள இளமையிலே ஒரு கழியை தயாராக வைத்துக்கொள்ளவேண்டும். – ஜெர்மனி –

- கோபத்தில் செத்தால் பரவாயில்லை. பசியால் செத்துப் போனாலும் பரவாயில்லை. களவு செய்யாதீர்கள். – ரஷ்யா –

- அகம்பாவம் மகா பொல்லாத குதிரை. அது எஜமானை கீழே தள்ளாது விடாது. – ஸ்கொட்லாந்து –

- உழைப்பு மகிழ்ச்சிக்குத் தந்தையாகும். – பிரான்ஸ் –

- நாவில் எலும்புகள் கிடையாது. ஆனால் பலரது எலும்புகளையும் நொறுக்குகிறது. – அல்பேனியா –

- எவனொருவன் ஓர் அடியை எடுத்துவைக்கு முன் ஆலோசிக்கிறானோ, அவன் வாழ்நாள் முழுவதும் தனது ஒரு காலிலே நிற்பான். – சீனா –

- ஒவ்வொரு தடவையும் நீ ஒருவனை மன்னிக்கும்போது அவனைப் பலஹீனப்படுத்துகின்றாய். உன்னை பலப்படுத்துகின்றாய். – அமெரிக்கா –

- ஒரு பெண்ணை சிந்திக்க வைப்பதைவிட நடனமாடவைப்பது சுலபம். – ஹங்கேரி –

- மேன்மையான பதில்கள் கடுங்கோபத்தைத் திசைதிருப்பிவிடும். கொகூரமான சொற்கள் கோபத்தை எழுச்சியுறச்செய்யும். – இங்கிலாந்து –

COMPUTER TYPESETTING BY : MOBILECITY - NAWALAPITIYA
PRINTED BY : A.J. PRINTERS, DEHIWELA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org